ශ්‍රී ලංකා ප්‍රජාතාන්ත්‍රික සමාජවාදී ජනරජයේ ගැසට් පත්‍රය

අති විශෙෂ

# இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானப் பத்திரிகை

அதி விசேஷமானது

අංක 1863/10 - 2014 මැයි මස 20 වැනි අඟහරුවාදා - 2014.05.20

*1863/10 ஆம் இலக்கம் - 2014 ஆம் ஆண்டு மே மாதம் 20 ஆந் திகதி செவ்வாய்க்கிழமை*

(அரசாங்கத்தின் அதிகாரத்துடன் பிரசுரிக்கப்பட்டது)

# பகுதி I : தொகுதி (I)- பொது

## அரசாங்க அறிவித்தல்கள்

### கல்விக் கட்டளைச் சட்டம்

*(185 ஆவது அத்தியாயமான) கல்விக் கட்டளைச் சட்டத்தின் 37 ஆவது பிரிவின் கீழ் கல்வி அமைச்சரினால் வெளியிடப்படும் பிரமாணங்கள்.*

பந்துல குணவர்த்தன,
கல்வி அமைச்சர்.

கல்வி அமைச்சு,
இசுறுபாய,
பலவத்த,
பத்தரமுல்ல,
2014, மே 20.

பிரமாணங்கள்

1. இப் பிரமாணங்கள் "சர்வதேச பாடசாலைகள் மற்றும் தனியார் பாடசாலைகளில் 1 ஆம் தரம் தொடக்கம் 8 ஆம் தரம் வரை கல்வி கற்கும் இலங்கை மாணவர்களுக்கு தாய்மொழி, சமயம், இலங்கை வரலாறு எனும் பாடங்களைக் கட்டாயமாக்கும் பிரமாணங்கள்" என அறிமுகம் செய்யப்படுகின்றது.

2. 2015 ஆம் ஆண்டு ஆரம்பிக்கும் புதிய கல்வித் தவணையிலிருந்து அனைத்து சர்வதேச பாடசாலைகள் மற்றும் தனியார் பாடசாலைகள் தமது பாடத்திட்டத்தை நடைமுறைப்படுத்துகையில் கீழ்வரும் பிரமாணங்களை கட்டாயமாக பின்பற்றுதல் வேண்டும்.

(i) *தாய்மொழி*

1 ஆம் தரத்திலிருந்து 8 ஆம் தரம் வரை கல்வி கற்கும் அனைத்து இலங்கைப் பிள்ளைகளுக்கும் கட்டாய பாடமொன்றாக தாய்மொழி (சிங்களம்/தமிழ்) ஐ கற்பித்தல் வேண்டும்.

(ii) *சமயம்*

1 ஆம் தரத்திலிருந்து 6 ஆம் தரம் வரை கட்டாய பாடமாக மாணவர்களுக்கு, உரிய சமயத்தை கற்பிக்கவேண்டியதோடு 7 ஆம் தரத்திலிருந்து 8 ஆம் தரம் வரை கற்கின்ற பிள்ளைகளின் விழுமியங்களை விருத்தி செய்யக்கூடிய வகையில் சமய பாடத்தை தனிப் பாடமாகவோ சமய வேலைத்திட்டங்களை திட்டமிடப்பட்டோ உரிய சமயத்தினை கற்பித்தல் வேண்டும்.

(iii) *இலங்கை வரலாறு*

1 ஆம் தரத்திலிருந்து 8 ஆம் தரம் வரை இலங்கை வரலாற்றினை கட்டாய பாடமொன்றாக கற்பிக்க வேண்டியதோடு தற்போது வரலாறு ஒரு பாடமாக கற்பிக்கப்படின் வரலாற்றுப் பாடத்துடன் இலங்கை வரலாற்றினை போதுமான அளவு உட்படுத்தப்படல் வேண்டும்.

3. இது தொடர்பாக கல்வி அமைச்சினால் வழங்கப்படும் வழிகாட்டல்களை அனைத்து சர்வதேச பாடசாலைகளும், தனியார் பாடசாலைகளும் கட்டாயமாக பின்பற்றுதல் வேண்டும்.

6- 42